பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 01 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டிற்கும், சமூக வளர்ச்சிக்கும் கல்வி பயன்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. இந்திய ராணுவத்தினரின் தைரியத்தையும், கடமை உணர்வையும் போற்றுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. கொல்கத்தாவில் **IPAC** நிறுவனத்தில் சோதனை நடத்திய அமலாக்கத் துறையினர் மீது மேற்குவங்க காவல்துறையினர் பதிவு செய்த முதல் தகவலறிக்கையை உச்சநீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.

4. பொங்கல் பண்டிகையையொட்டி, மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் இன்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற உத்தரப்பிரதேச அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**- இனி விரிவான செய்திகள் —**

<<<<<<>>>>>>

நாட்டிற்கும், சமூக வளர்ச்சிக்கும் கடமையாற்றுவதற்கான கருவியாக கல்வி பயன்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் அமிர்சரஸில் உள்ள குருநானக் தேவ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மாணவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கும், வருமானத்திற்காக மட்டும் கல்வி பயன்படும் என்ற நோக்கில் செயல்படக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சிப் பயணத்தில் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கல்லூரி படிப்பை முடித்தபின் மாணவர்கள் தாங்கள் விரும்பும் எந்த துறையில் பணியாற்றினாலும், நாட்டின் வளர்ச்சியையும், மக்களின் முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

கல்வியின் மூலம் கிடைக்கும் நேர்மை, ஒழுக்க நெறிகள், ஒற்றுமை போன்ற மாண்புகளை வாழ்வில் எப்போதும் கடைபிடிக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தனிப்பட்ட லாபத்தைவிட, நாட்டின் மற்றும் சமுதாயத்திற்கு கிடைக்கும் பலன் மேலானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில், அதிக அளவில் மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிய குடியரசுத் தலைவர், பெண்களின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற சிந்தனையை ஊட்டிய குருநானக்கின் கனவை இந்த பல்கலைக்கழகம் நிறைவேற்றியுள்ளதாக பாராட்டினார்.

பெண்கள் தங்களுக்கான வாய்ப்புகளை நம்பிக்கையோடும் பெறுவதற்கான சூழ்நிலையை மேம்படுத்த வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

இந்திய ராணுவத்தினரின் தைரியத்தையும், கடமை உணர்வையும் போற்றுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

ராணுவ தினத்தையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டை பாதுகாக்கும் வீரர்கள் தன்னலமற்ற சேவையின் அடையாளமாக திகழ்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை பாதுகாக்கும் பணியை அயராது உறுதியுடன் அவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும், சவாலான தருணங்களிலும் அவர்கள் தங்களது இன்னுயிரையும் துச்சமென மதித்து தேசத்தை காப்பாற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ராணுவ வீரர்களின் கடமை உணர்வுக்கும், உறுதிபாட்டுக்கும் நாட்டு மக்கள் அனைவரும் நன்றிக் கடன் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இக்கட்டான தருணங்களில் இந்திய வீரர்கள் தங்களது வெற்றியை நிலைநாட்டியுள்ளதையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

குஜராத்தியில் மொழியாக்கம் செய்யப்பட்ட ஆதி சங்கராச்சாரியாரின் புத்தக தொகுப்பை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று வெளியிட்டார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய திரு அமித் ஷா, ஆதி சங்கராச்சாரியாரின் புத்தகங்களை மொழியாக்கம் செய்து வெளியிட்ட டாக்டர் கௌதம் பட்டேலுக்கு தமது பாராட்டுகளை தெரிவித்தார்.

ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ள சிறப்பியல்பை வெளிப்படுத்துவதற்கு ஆதி சங்கராச்சாரியாரின் புத்தகங்கள் வழிகாட்டியாக அமையும் என்று கூறினார்.

இளைஞர்கள் இந்த புத்தக தொகுப்பில் உள்ள விவேக சூடாமணி என்ற புத்தகத்தை ஒருமுறையாவது படித்து தங்களுக்குள்

அமைந்துள்ள நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

இந்தியாவிலிருந்து ஆயுஷ் மருந்துகள் மற்றும் மூலிகைகள் ஏற்றுமதி நடப்பாண்டில் ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **2023-24-**ஆம் ஆண்டு **649** மில்லியன் டாலர் அளவுக்கு ஆயுஷ் மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், நடப்பாண்டில் இவற்றின் ஏற்றுமதி **688** மில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பாரம்பரிய மருந்துகள் மற்றும் மூலிகைப் பொருட்களின் சர்வதேச தேவையை பூர்த்தி செய்வதற்கு வசதியாக ஆயுஷ் ஏற்றுமதி வளர்ச்சி குழுமம் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுஷ் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்திருப்பதன் மூலம் நாட்டின் பாரம்பரிய மருந்து தயாரிக்கும் துறை வலுப்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சியின் பயனாக நாட்டின் பாரம்பரிய மருந்துகள் உலகச்சந்தையை சென்றடைந்திருப்பதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்

<<<<<>>>>>>

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மத்திய அரசு திட்டங்களின் பயனாக அந்த துறை வலுப்பெற்றிருப்பதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையை இன்று புதுதில்லியில் நித்தி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு வி வி ஆர் சுப்பிரமணியம் வெளியிட்டு பேசினார்.

இந்த துறையின் மேம்பாட்டுக்கான ஒவ்வொரு திட்டங்கள் குறித்தும் விளக்கி பேசிய அவர், திறன் மேம்பாட்டுக்கான பல அம்சங்கள் அரசின் திட்டங்களில் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

சிறு-குறு தொழில் வளர்ச்சியில் தற்போதுள்ள அரசு திட்டங்களால் ஏற்பட்டுள்ள செயல் திறனின் வளர்ச்சி குறித்து தெரிவிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசின் ஊக்குவிப்புத் திட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாக கூறிய அவர், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான திட்டங்களை முழுமையாக அறிந்துகொள்வதற்கும்,

பயன்களை நேரடியாக பெற்றுக் கொள்வதற்குமான இணையதள வசதி உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறையின் செயலர் திரு எஸ் சி எல் தாஸ், நித்தி ஆயோக் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ள ஆலோசனைகள், பரிந்துரைகள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கொல்கத்தாவில் ஐபேக் நிறுவனத்தில் சோதனை மேற்கொண்ட அமலாக்கப்பிரிவு அதிகாரிகள் மீது மேற்குவங்க காவல்துறையினர் பதிவு செய்த முதல் தகவலறிக்கையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

இதுதொடர்பாக அமலாக்கத்துறையின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு பிரசாந்த் குமார் மிஸ்ரா, திரு **Vipul Pancholi** ஆகியோர் கொண்ட அமர்வு, இந்த மனு மீது இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, அம்மாநில

காவல்துறை தலைவர் திரு ராஜீவ்குமார், கொல்கத்தா காவல் ஆணையர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

இந்த வழக்கு மீதான விசாரணையை அடுத்த மாதம் 3-ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் பொங்கலையொட்டி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Voice Byte — ரகுராஜா — 38 Sec. )***

<<<<<<>>>>>>

மக்களின் உடல் நலனை கருத்தில்கொண்டு அரசின் மருத்துவத் திட்டங்கள் வகுக்கப்படுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் 50ஆவது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், ஏழை எளிய மக்களுக்கு அரசின் மருத்துவத் திட்டங்களின் பயன்கள் சென்றடைய அனைவரின் ஒத்துழைப்பும், முயற்சியும், அர்ப்பணிப்பும் அவசியம் என்று கூறினார்.

ஏழை-எளிய மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவையை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை அறக்கட்டளை மூலம் வழங்கப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆரோக்கியமான மக்களை உருவாக்கினால்தான் நாட்டின் வளர்ச்சிப் பணிகளில் அவர்கள் பங்கேற்க முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் தெரிவித்தார்.

ஆரோக்கியமான மக்களால்தான் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட முடியும் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<<<>>>>>>

ஈரான் நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதை இந்தியா மக்கள் தவிர்க்க வேண்டும் என வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

மறு அறிவிப்பு வெளியிடப்படும் வரை ஈரான் பயணத்தை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஈரான் நாட்டில் வசிக்கும் இந்திய மக்கள் டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தூதரகத்தின் தொலைபேசி எண்ணிலோ, இ-மெயில் மூலமாகவோ தொடர்புகொண்டு உதவி பெறலாம் என்றும் வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று மும்பை அணி - உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

நவிமும்பையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற உத்தரப்பிரதேச அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

-----------------

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் 108 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 12 புள்ளி இரண்டு ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 70 ரன் எடுத்துள்ளது.

Bulawayo-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த அமெரிக்கா 35 புள்ளி இரண்டு ஓவரில், 107 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

முன்னதாக, இந்தியா ஒரு விக்கெட் இழப்பிற்கு **21** ரன் எடுத்த நிலையில், மழை காரணமாக ஆட்டம் சிறிதுநேரம் தடைபட்டிருந்தது.

**<<<<<<END>>>>>>**